செ.வெ.எண்: 583/2016 நாள்: 30.08.2016

## பத்திரிக்கை செய்தி

# இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு மூலம் கணவாய் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு மீன்வளத்துறை மூலம் 50% அதிகபட்சமாக ரூ.25,000/-மானியம் வழங்கும் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2016-17 -ம் ஆண்டில் கணவாய் மீன்பிடிப்பில் ஈடுபடும் நாட்டுப்படகு மீனவர்களுக்கு கணவாய் மீன்பிடிப்பிற்கு தேவையான உபகரணங்களை வாங்கிட 50% அதிகபட்சமாக ரூ.25,000/- மானியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைய விரும்பும் நாட்டுப்படகு (வள்ளம் / கட்டுமரம்) மீனவர்கள் மீன்துறை உதவி இயக்குநர், குளச்சல் அலுவலகம் வழியாக வழங்கப்படும் விண்ணப்பத்தை பெற்று பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 10.09.2016 -க்குள் சமர்ப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்பதன் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளதால் நாட்டுப்படகு மீனவர்கள் உடனடியாக விண்ணப்பங்களை மீன்துறை உதவி இயக்குநர், குளச்சல் அலுவலகத்தில் சமர்ப்பித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பும் மீனவர்கள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

1. முழுநேர மீன்பிடி தொழில் செய்யும் மீனவராக இருக்க வேண்டும்.
2. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு உரிமையாளராக இருக்க வேண்டும்.
3. மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினராக இருக்க வேண்டும்.
4. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு (வள்ளம் / கட்டுமரம்) 8 மீ முதல் 10 மீ வரை நீளம் உள்ளதாகவும், 10 குதிரைத்திறனுக்கு மிகாத வெளிப்பொருத்து இயந்திரத்தையும் கொண்டிருக்க வேண்டும்.
5. நாட்டுப்படகு மீன்துறையில் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு நாளது தேதிவரை மீன்பிடி உரிமம் புதுப்பித்திருக்க வேண்டும்.
6. 01.04.2016 அன்று நாட்டுப்படகு கட்டப்பட்ட காலம் 3 வருடத்திற்குள்ளாகவும் இருக்க வேண்டும்.
7. 2012-13 ஆம் ஆண்டில் ஏற்கனவே இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற்றவர்கள் தற்போது விண்ணப்பிக்க தகுதியில்லை.

மேலும், விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் செயல்படும் மீன்துறை உதவி இயக்குநர் குளச்சல் அலுவலகத்தை அலுவலக வேலை நாட்களில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம்,
குளச்சல்
(இருப்பு) சைமன்காலனி,
கோடிமுனை அஞ்சல்.
குளச்சல் - 629251
தொலைபேசி எண்: 04651-226235.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்,
(இருப்பு) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.